1979 பிப்ரவரி 26]

சாலைகள் அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கிறன்றன ? நெடுஞ் சாலைகள் மட்டும் அபிவிருத்திக்கு எடுததுக் கொள்ளப்பட்டுள் ளனவா அல்லது நகரத்தின் உள்பகுதியிலுள்ள சாலைகளும் அந்த நிதியிலிருந்து பராமரிக்கப்படுகின்றனவா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர் களே, தனிக் கேள்வி போடவும்.

அரிசனங்களுக்கு வழங்கப்பட்ட வீடுகளைப் பழுது பார்த்தல்

வினா எண். 189.—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு அரிசனநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா :

அரிசனங்களுக்கு 1967—ம் ஆண்டுக்கு முன் பங்குத் தொகை பெற்று அளிக்கப்பட்ட ஓட்டு வீடுகளுள் தற்போது மோசமான நிலையில் உள்ளவற்றை அரசே பழுது பார்த்துக் கொடுக்கும் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்:— அரிசனங்களுக்கு 1967— ஆண்டுக்கு முன் பங்குத் தொகை பெற்று அளிக்கப்பட்ட ஓட்டு வீடுகளுள் தற்போது மோசமான நிலையில் உள்ளவற்றை அரசே பழுது பார்த்துக் கொடுக்கும் திட்டம் ஏதும் இல்லை.

திரு. மா. மணிமாறன். தலைவரவர்களே, 1967-ஆம் ஆண்டுக்கு முன்னால் கட்டப்பட்ட ஓட்டு வீடுகள் குறைந்த தொகையில், 600 ரூபாய்க்குள் கட்டப்பட்டதால் அவை சரியாக இல்லை. அங்கு வாழ்கின்ற மக்கள் என்றைக்கு இடிந்து விழுமோ என்று அச்சத்தில் இருந்துக் கொண்டிருக் கிறார்கள். எனவே, அப்படி 1967-ஆம் ஆண்டுக்கு முன்னால் கட்டப்பட்ட ஓட்டு வீடுகளை இப்போது கட்டுகின்ற காங்கிரீட் வீடுகளாக கட்டிக் கொடுக்க முன்னுரிமை கொடுத்து, அவர்கள் அச்சமின்றி வாழ வழிவைகை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர வர்களே, அரசாங்கம் ஒரு வீட்டைக் கட்டிக் கொடுத்துவிட் டால, அது அவர்களுடைய உரிமை, உடமையாகிறது, ஆகவே, மீண்டும் அந்த வீடுகளை பழுது பார்ப்பது என்பது அரசாங்கம்

செய்யக்கூடிய காரியம் அல்ல. தனிப்பட்டவர்களின் வீடுகளை பழுது பார்த்துக் கொடுக்க ஆரம்பித்தால் அது எங்கே போய் நிற்கும் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே, இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ள முடியாது.

திரு. செ. இராமலிங்கம் : தலைவரவர்களே, கும்பகோணம் வட்டம் நாச்சியார் கோவிலில் 1967-ம் ஆண்டுக்கு முன்னால் இத்திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட வீடுகள் சென்ற ஆண்டு வீசிய கடும் புயலால் சேதம் அடைந்துள்ளன. அதற்கு அரசு வழங்குகின்ற நிவாரணத் தொகையான 200 ரூபாய் கூட ஓட்டுவீடு என்பதால் கிடைக்க வில்லை. ஆகவே, அப்படி சேதமடைந்த வீடுகளுக்கு நிவாரணத் தொகையாவது கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு அரசாங்கம் கொடுக்கிற மானியத் தொகையைக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். எந்தெந்த பகுதிகளில் கொடுக்கவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தால் அதற்கு அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கும்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : தலைவரவர்களே, பழைய வீடுகள், அதாவது காங்கிரஸ் ஆட்சி காலத்திலேயும் சரி, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலேயும் சரி, கட்டப்பட்ட வீடுகள் மிகப் பரிதாபகரமான நிலையில் இருக்கின்றன. அவை எல்லாம் இடிந்து விழுகின்ற நிலையிலே இருக்கின்றன. அவைகள் புதுப்பிக்கப்படவேண்டும் என்று சொல்லப்படுகிறபோது நாங்களும் அதே வழியைத்தான் கடைப்பிடிப்போம் என்று சொல்வது சரியல்ல. ஆகவே இந்த மாதிரி இடங்களைப் பார்த்து அவற்றை புதுப்பித்து அங்குள்ள மக்களை வாழ வைக்க அரசு கவனம் செலுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இந்த அரசாங்கம் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு மாண்புமிகு உறுப்பினர் திரு. கூத்தக்குடி சண்முகம் போன்றவர்கள் குறிப்பிடுவதுபோல எந்த எந்த பகுதிகளில் இப்படிப்பட்ட விரிசல்கள் பழுதுபார்க்கப்படவேண்டிய நிலையில் இருக்கின்றன என்று ஒரு அறிக்கை கேட்டிருக்கிறோம். அந்த அறிக்கை வந்த பிறகு சம்பந்தப்பட்ட கான்ட்ராக்டர் மீது இந்த அரசு கடுமையான நடவடிக்கை எடுக்க இருக்கிறது. அதோடு இந்த விஷயத்தை அனுதாபத்தோடு கவனித்து அதுபற்றி பரிசிலனை செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.